*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# தொல்காப்பியம் மற்றும் அகநானூற்றில் தலைவனின் மனவெளிப்பாடுகள்

**ந.மாலதி**
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*தொல்காப்பியம் தமிழரின் முதல் அடையாளம். தமிழ் மொழிக் காப்பு முயற்சி மட்டுமன்றி தமிழின வரலாற்றுக் களஞ்சியப் பதிவாகவும் சமுதாய வாழ்வு பற்றிய சான்றுகளைப் பொதிந்து வைத்த ஆவணமாகவும் தொல்காப்பியம் பொருளதிகாரம் திகழ்கிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பழந்தமிழர் நாகரிகக் கையேடு என்றே குறிப்பிடலாம். அகநானூற்றில் தலைவன் தன் சுற்றத்தார் மற்றும் தன் நலன் கருதி பொருள்வயிற் பிரிவிற்காக தலைவியை விட்டு பிரிந்துச் செல்கின்றார். கடுமையான வெப்பம் மிகுந்த பாலை நிலவழியில் செல்லும் போது கூட தலைவியை நினைத்து மனம் வருந்தும் தன்மையினையும், அன்பின் வெளிப்பாடுகளையும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

### பிரிவு வகைகள்

அரசனும் அரசனோடு ஒத்த பிறரும் முல்லை முதலா நிலம் காக்கவும், பொருள் திரட்டவும் பிரிவதுண்டு. இது நாடு காத்தற் பிரிவும், பொருள் வயிற் பிரிவுமாகும். இதனை தொல்காப்பியர்,

**"மேவியசிறப்பின் ஏனோர் படிமைய**
**முல்லைமுதலாச் சொல்லிய முறையில்**
**பிழைத்ததுபிழையாதாகல் வேண்டியும்**
**இழைத்தஒண்பொருள் முற்றவும் பிரிவே"**
**(தொல்-பொருள்-அகத்-நூ:974)**

பிழைகள் நேர்ந்துழி அவற்றை நீக்கக் காத்தல் வேண்டியும், முயன்று செய்த பொருள் தேடும் பொருட்டும் பிரிவு ஏற்படும். முன்னது நாடு காவற் பிரிவு எனவும் பின்னது பொருள்வயிற் பிரிவு எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

### பொருள் வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவு வாழ்க்கையின் நன்மை கருதியே நடைபெறும் ஒன்றாக திகழ்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் பொருட் செல்வம் அத்தியா அவசியமான ஒன்றாக திகழ்கிறது. வறுமையின் இழிவு நிலையை அகற்றவும் இன்பமான வாழ்வு வாழவும் பொருட் செல்வம் முக்கியமான ஒன்றாகும். இதனை தொல்காப்பியர்,

**"நாளதுசின்மையும் இளமையதுஅருமையும்**
**தாளாண் பக்கமும் தகுதியதுஅமைதியும்**
**---------- ------------- -------------- ----------------------**
**ஒன்றாப் பொருள்வயின் ஊக்கியபாலினும்**
**வாயினும் கையினும் வகுத்தபக்கமோடு**
**ஊதியம் கருதியஒருதிறத் தானும்"**
**(தொல்-பொருள்-அகத்-நூ:987)**

பொருள்வயிற் பிரிய எண்ணும் போது,தலைவன் ஒருபக்கம் காதல் உணர்வாலும் மறுபக்கம் பொருள் தேடும் முயற்சியாலும் மனம் ஒருபாற்படாது ஊசலாட வருந்துவான். வாழ்நாள் மிகக்குறைவு, இளமை போனால் மீளாது. முயற்சியின் உயர்வு, குடும்பமேம் பாட்டால் பெறும் பெருமை மற்றொன்று. வறுமையின் இளிவு, செல்வ முடைமையின் உயர்ச்சி, ஒன்றுடன் ஒன்று முரண் பாடானவை. அன்பின் பெருக்கமும் பிரிவின் அருமையும் ஒருபுறம். இன்ப வாழ்வோடு பொருந்தாதப்

பொருள் தேடும் முயற்சியில் ஈடுபடுத்தும் ஊழினை நினைவான். வாழ்க்கை மேம்பாடு கருதி பிரியநினைதல் ஒருவகையாகும். இவற்றில் வாயால் ஓதும் கல்வி, கையால் பழகும் தொழிற் பயிற்சியும் படைப் பயிற்சியாலும் பிரிவு ஏற்படலாம். பொருளுக்காகப் பிரிந்தால் புகழும் பிரியாவிடின் ஏற்படும் மானக் குறைவும் பற்றி தலைவன் மிகவும் ஆழமாகச் சிந்திப்பான். என தொல்காப்பியத்தின் மூலம் தெளிவு பெற முடிகிறது.

### தலைவனின் மனச்சிந்தனைகள்

தலைவன் பொருளே நோக்கமாகக் கொண்டு தலைவியை விட்டு பிரிய நேரிடுகிறது. அந்நிலையில் தலைவி மிகவும் வருந்துகிறாள். தலைவன் தன்னோடு அழைத்துச் செல்ல மறுக்கிறான். இடைச் சுரத்து வழியாக கடுமையான வெப்பம் மிகுந்த காட்டின் வழியாக பயணம் செல்லும் போது தலைவியின் நினைவுகள் தலைவனை வருத்தமடைய செய்கிறது.

மாலை பொழுதில் தலைவியை நினைத்து அவள் எந்நிலையை அடைவாளோ? என தலைவன் மனம் உருகிதன் அன்பின் தன்மையை அகநானூற்றின் பாடல் வரிகள் நமக்கு முழுமையாகத் தெளிவு படுத்துகிறது.

### தலைவியின் வருத்தம்

**“சுரனிடைவிலங்கியமரன் ஓங்கு இயவின்,**
**வந்துவினைவலித்தநம்வயின்,என்றும்,**
------------------------ ----------------- ---------------------
**அவிழினும்,உயவும் ஆய்மடத் தகுவி**
**பகுவாய்ப் பல்லிபடுதொறும் பரவி,**
**‘நல்ல கூறு’எனநடுங்கி,**
**புல்லென் மாலையொடுபொரும்கொல்**
**தானே”**

**(அகம் :289,பா.வ:4-8, 16-18 )**

பாலைநிலத்தே, மரங்கள் குறுக்கிட்டு வளர்ந்துள்ள அரிய வழிகளைக் கடந்து, பொருளீட்டும் தொழிலிலே உறுதி பூண்டு தலைவன் வந்துள்ளான். அணைத்த கை நெகிழ்ந்து சிறிது விலகினும் வருந்தும் இயல்புடைய அழகிய மடப்பத்தையுடைய நம் தலைவனின் உள்ளமோ வருந்துவதை விட்டொழியாது நம்மையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும்.

பிளந்த வாயினையுடைய பல்லி ஒலிக்கும் பொழுதெல்லாம் தெய்வத்தைத் தொழுது, “நற்சொல் கூறுக” என அதனை வேண்டி, மனம் நடுங்கி ,ஒளியிழந்த மாலைக் காலத்தே துன்புற்று வருந்துவாளோ? எனத் தலைவன் தலைவியின் வருத்தத்தை தனது மனத்திற்கு எடுத்துக் கூறும் விதமாக அமைந்துள்ளது.

### நெடுந்தொலைவு வந்த பின் தலைவியை நினைந்தாய்

**“சுடர்தெறவருந்தியஅருஞ்சுரம் இறந்து,**
**ஆங்கு உள்ளினை-**
**வாழிய,நெஞ்சே! –போதுஎனப்**
**புலம்கமழ் நாற்றத்து இரும்பல் கூந்தல்,**
**நல்எழில் மழைக்கண் நம் காதலி,**
**மெல்இறைப் பணைத்தோள் விளங்கும்மாண்**
**கவினே”**

**(அகம்:291,பா.வ:21-25)**

ஞாயிறு காயும் அன்னத் தன்மை வாய்ந்த கடத்தற்கரிய சுரவழிகளைக் கடந்து வந்து, புலமெல்லாம் மணங்கமழும் கரிய கூந்தலினையும், அழகிய குளிர்ச்சிப்பொருந்திய கண்களையும் உடைய நம் காதலியின் மெல்லிய சந்தினையுடைய பருத்தத் தோள்களின் மாட்சிமைப்பட்ட அழகினை நீளநினைத்தனை; பாலை நிலத்தே அரிய வழிகள் பலவற்றைக் கடந்து வந்துள்ளோம்; இப்போது தலைவியை நினைந்து யாது பயன்? எனத் தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறினான்.

### நமக்கு என்ன தீங்கு உண்டாகுமோ?

**“பானாட் கங்குலும்,பெரும்புன் மாலையும்,**
**ஆனாநோயோடுஅழிபடர்க் கலங்கி,**
**நம்வயின் இனையும் இடும்பைகைம்மிக,**
**என்னைஆகுமோ,நெஞ்சே.**
---------------------- ------------------ -----------------------
**சிறுகுடிமறவர் சேக்கோள் தண்ணுமைக்கு**
**எருவைச் சேவல் இருஞ்சிறைபெயர்க்கும்**
**வெருவருகானம்,நம்மொடு,**
**‘வருவல்’ என்றோன் மகிழ்மடநோக்கே?**

**(அகம்:297,பா.வ-1-4 ,16-19)**

இரவுக் காலத்தும் பொழிவிழந்த மாலைக் காலத்தும் நீங்காதத்காம நோயால் நெஞ்சழிந்து கலங்க, என்னை நினைத்தலாலே அவள் அடைந்த துன்பம் அளவு கடந்து சென்றமையால், அத்துன்பத்தை செய்த எமக்கு என்ன தீங்குநேருமோ? வீரர்கள் எழுப்பிய ஏறுகோட் பறை யொலியைக் கேட்ட ஆண் பருந்துதன் சிறகினை விரித்துப் பறந்து போதற்கு இடனான அச்சம் தரும் காட்டிற்கு நானும் வருவேன் என்று காதலி கூறினாள்; மடப்பம் பொருந்திய அவளுடைய பார்வையினைக் கண்டு வைத்தும் அவளைப் பிரிந்து இக்கான கத்து வந்துவிட்டேன் என்று தலைவன் தலைவியை நினைத்து வருந்தினான்.

### துன்பம் அடைந்த தலைவியின் நிலை மறுத்தற்கரியது

**எல்லையும் இரவும், வினைவயின் பிரிந்த**
**முன்னம்,முன் உறுப்பு அடைய உள்ளிய**

**பதிமறந்துஉறைதல் வல்லினம் ஆயினும்,**
**அதுமறந்துஉறைதல் அரிதுஆகின்றே**
------------- --------------------- ---------------------------
**நாநடுக்குற்றநவிலாக் கிளவியொடு**
**அறல்மருள் கூந்தலின்**
**மறையினள்,'திறல்மாண்டு**
**திருந்துகமாதோ,நும்செலவு'**

**(அகம்:299 பா.வ-1-4, 17-19)**

நா நடுக்க முறதிருந்தாத சொற்களால் 'நும்முடைய பொருள் வயிற் செலவுமாட்சிமை பெற்றுத் திருத்த முறுவதாக' என்று கூறி பெருமுச்சுவிட்டாள். பொருள் ஈட்டும் வினையின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்த நெஞ்சமே! பண்டு தொட்டுப் பகலும் இரவும் நினைக்கப்பட்ட நம் ஊரினை மறந்து இவ்விடம் தங்க நம்மால் முடியும்; ஆனால், துன்பம் தரும் வருத்தத்தால் மயங்கிய நிலையினளாகிய எம் தலைவியை மறந்து இவ்விடம் தங்குதல் அரிதாக உள்ளது

## முடிவுரை

தொல்காப்பியம் முதல் சங்க இலக்கிய அக நூல்களில் பொருள் வயிற் பிரிவு பற்றி கூறப்பட்டுள்ளது. பொருட் செல்வம் மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகவும் அனைவராலும் மதிக்கக்கூடிய ஒன்றாக அமைகின்றன, தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள பொருள்வயிற் பிரிவு அதனால் ஏற்படும் புகழும் அகநானூற்றில் கூறப்பட்டுள்ள பொருள்வயிற் பிரிவும் ஒத்த கருத்துக்களாக அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துக் கொள்ளக் முடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம்- முனைவர் தமிழண்ணல் தொகுதி-1
2. அகநானூறு மூலமும் உரையும் - தொகுதி-2- முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்